4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

ஆ. கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கைவரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

இ. கேளிக்கை வரி திருத்த சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கின்றது.

(ஈ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தினை மேலும் திருத்துவதற்காக கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முனவடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். இந்த விற்பனை வரி என்பது மூதறிஞர் இராஜாஜி அவர்களால் தமிழகத்திலே முதன் முதலாக மது விலக்கு அமல் செய்யப்பட்ட நேரத்திலே காங்கிரஸ் கட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டது என்பதை நாம் அறிவோம். அதனாலே தான் இது ஆங்கிலத்திலே மெட்ராஸ் சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்லுவார்கள். இதனை முன் உதாரணமாகக்

*1982 ஏப்ரல் 3 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.